# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/12 - 2020 ජූනි මස 23 වැනි අඟහරුවාදා - 2020.06.23

*2181/12 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தில், 92 ஆம் பிரிவின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு காலி நகர எல்லை கழிவுநீர் மீள்சுழற்சி செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
இல. 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, யூன் 08.
5-2/GL/05.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

காலி மாவட்டத்தில், காலி - கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில், இல. 1013 A, கிங்தொட கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், தடெல்ல கிராமத்தில் அமைந்துள்ள, காலி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. GA/GFG/2016/313 ஐ உடைய திட்டப்படத்தில் துண்டு இல. C எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் 0.1604 ஹெக்டயார் (01 றூட், 23.43 பேர்ச்சஸ்) விஸ்தீரணத்தையுடைய கனத்த அல்லது கனத்த வத்த மற்றும் தெனியகனத்த என்றழைக்கப்படுகின்ற பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதியின் விபரங்கள் :

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : இந்த வரைபடப் படியெடுப்பின் துண்டு இல. B மற்றும் டப்ளியூ. ஷெல்டன் மற்றும் மேலும் பலர் உரிமை கோருகின்ற அடபகஹவத்த;

கிழக்கு : டப்ளியூ. ஷெல்டன் மற்றும் மேலும் பலர் உரிமைகோருகின்ற அடபகஹவத்த மற்றும் வீதி;

தெற்கு : வீதி மற்றும் இந்த வரைபடப் படியெடுப்பின் துண்டு இல. B;

மேற்கு : இந்த வரைபடப் படியெடுப்பில் துண்டு இல. B.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :

01. திரு. பீ. எச். ரூபரத்ன/திருமதி. பீ. எச். தரங்கா மதுஷானி,
இல. 42/07, போபே வீதி,
கிங்தொட.

02. திருமதி. பீ. எச். நந்தனீ/திருமதி. பீ. எச். திலகரத்ன தரங்க மதுஷானி,
இல. 42/07, போபே வீதி,
கிங்தொட.

7 - 237

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தில், 92 ஆம் பிரிவின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு காலி பெரும்பாக III ஆம் கட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலை அமைந்துள்ள இடத்திற்கு உட்செல்லும் வழி மற்றும் நீர்க்குழாய் பதித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக காணிப்பகுதியொன்றின் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
இல. 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, யூன் 08.
5-2/GL/02.

**அட்டவணை**

காலி மாவட்டத்தில், இமதுவ பிரதேச செயலகப் பிரிவில், இல. 154B, பொல்ஹேன கிராம அலுவலர் பிரிவில், அகுலுகஹ கிராமத்தில் அமைந்துள்ள, கலுபஹனவத்த அல்லது கலுபஹன்வத்த என்றழைக்கப்படுகின்ற 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதியின் விபரங்கள் :

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி;
கிழக்கு : தற்போதுள்ள உட்செல்லும் வழியின் ஒரு பகுதி;
தெற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி;
மேற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :

01. திரு. பீ. எச். ஷன்திரசிறி,
தெனியவத்த,
அகுலுகஹ.

7 - 242

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.